சேப்பாக்கம், சென்னை-5

### சுருக்கம்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோவை 2010 – மாநாடு நடைபெறும் கொடிசியா அரங்கிற்கு அவிநாசி சாலையிலிருந்து செல்லும் திட்டச்சாலைக்கு அணுகு சாலை அமைக்க நிர்வாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை

அரசு ஆணை (3 டி) எண்:11 நாள்:07.04. 2010

படிக்கவும்:

1. கோவை மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.33–2009, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, நாள்.15.2.2010.
2. கோவை மாநகராட்சி ஆணையாளரின் கடிதம் ந.க.எண்.2223– 2009 எம்.டி.4. நாள்.19.2.2010.
3. கோவை மாவட்ட ஆட்சியரின் கடித எண்.33 – 2009 உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நாள் 7.3.2010.

* * * * *

ஆணை:

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் கொடிசியா அரங்கத்திற்கு அவினாசி சாலையிலிருந்து செல்லும் திட்டச்சாலையை (அணுகுசாலை) 60 அடி சாலையாக கோவை மாநகராட்சி மூலம் அமைக்கலாம் என தலைமைச் செயலாளர் அவர்களால் 25.11.2009 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது என்றும், இது தொடர்பாக சாலைப்பணிக்கு தேவைப்படும் நிலத்தைப்பெற நில உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றும், முக்கிய நில உரிமையாளரான திரு ஜி.ஆர் கார்த்திகேயன் அவர்கள் இந்த திட்டச்சாலையை 60 அடியாக அமைப்பதற்கு தேவையான நிலத்தை அளிக்க தனது ஒப்புதலைத் தெரிவித்துள்ளார் என்றும், பிற நில உரிமையாளர்களிடம் ஒப்புதல் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தற்பொழுது கோவை மாநகராட்சி ஆணையர் மேற்படி சாலையை 60 மற்றும் 80 அடி அகலத்தில் அமைக்கத் தேவையான இருவிதமான உத்தேச மதிப்பீட்டினை அனுப்பி வைத்துள்ளார் என்றும், அதன்படி 60 அடி சாலை அமைக்க கீழ்க்கண்டவாறு ரூ.226.37 இலட்சத்திற்கு மதிப்பீடு அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | விவரம் | உத்தேச மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | 60 அடி திட்டச்சாலை 2 வழிப்பாதையாக (13.50 மீட்டர் அகலம்) அமைத்தல் | 159.00 |
| 2. | சாலையின் மையத்தில் தெருமின் விளக்குகள் மற்றும் உயர்மட்ட கோபுர விளக்குகள் அமைத்தல். | 26.00 |
| 3. | சாலை மைய சுவர் கட்டுதல் | 41.37 |
| | மொத்தம் | ரூ.226.37 |

2. மேலும் போக்குவரத்து தேவைகளின்படி சாலை முழு அகலத்திற்கும் ஒரு வழிச்சாலையை இரு திசைகளிலும் பயன்படுத்த வேண்டியிருக்கும் என்பதால் நிரந்தர மையச்சுவர் தேவையில்லை எனக் கருதப்படுவதால் அதற்குரிய செலவினம் நீங்கலாக எஞ்சியுள்ள அத்திட்ட சாலை அமைக்க தேவைப்படும் ரூபாய் 1.85 கோடியை கோவை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசு அச்செயற்குறிப்பினை நன்கு ஆய்வு செய்து, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிக்குள் கொடிசியா அரங்கத்திற்கு, அவினாசி சாலையிலிருந்து செல்லும் திட்டச் சாலையை (அணுகுசாலை) ரூபாய் 1.85 கோடி (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) செலவில், அச்சாலையை விரிவுபடுத்தத் தேவைப்படும் நிலத்தை சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களிடமிருந்து கோவை மாநகராட்சியின் பெயருக்கு தானப்பத்திரம் பெற்று தரம் உயர்த்துவதற்கும், தெரு மின்விளக்குகள், மற்றும் உயர் மட்ட கோபுர விளக்குகள் அமைத்திடவும் நிர்வாக ஒப்புதல் அளிக்கிறது. நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட பின்னரே மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இத்திட்டப்பணிக்குத் தேவைப்படும் ரூபாய் 1.85 கோடி (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) யை கோவை மாநகராட்சிக்கு மானியமாக வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட மான்யத்தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

2217 – நகர்ப் பகுதி வளர்ச்சி
80 – பொது
800 – ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்
II – மாநிலத் திட்டம்
JJ – உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மானியம் வழங்குதல்
09 – உதவித் தொகை, 03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(DPC – 2217-80-800-JJ-0935)

5. மேலே பத்தி 3 ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று, கோவை மாநகராட்சிக்கு வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.19254/MAWS/10 நாள்.06.04.2010 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன்மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5
ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்

மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர்
தனி அலுவலர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, சென்னை-9.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர், சென்னை-9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை -9
செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (உ.த.செ.மா.) துறை,
சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ2) துறை, சென்னை-9.
நிதி (ந.நி ம கு.வ) துறை, சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி / நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

சே. பூவதி அம்மா 07/4/10
பிரிவு அலுவலர்.